4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 46/2022** **நாள்: 13.02.2026** **எ.ம.சா.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரகுநாத் | தொழில் | : | சட்ட அலுவலர், Shriram General Insurance |
| த/பெ | : | கணேசன் | கிராமம் | : | Coimbatore |
| வயது | : | 30 | தாலுகா | : | Coimbatore |
| | | | மாவட்டம் | : | Coimbatore |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**முதல் விசாரணை -**

நான் இந்த மனுவில் 3வது எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். இந்த மனுவில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

எ.ம.சா.ஆ.1 – TN 67 AL 0889 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீடு நகல்

எ.ம.சா.ஆ.2 – இறந்த நபரின் ஆதார் அட்டை புகைப்பட நகல்

**மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –**

நான் வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் எங்கள் நிறுவனத்தில் விபத்து காலத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3வது நபருக்கு ஏற்படும் இழப்பீட்டை செலுத்த நாங்கள் கடமைபட்டுள்ளோம் என்றால் சரிதான். விபத்து சம்பந்தப்பட்ட வாகனத்தில் தண்ணீர் டேங்கை ஏற்றிக்கொண்டு 7 நபர்கள் பயணம் செய்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மேற்படி விபத்தினால் ஒரு நபர் மட்டும் இறந்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விபத்து சம்பந்தமாக வேறு யாரும் இழப்பீடு கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த மனுவிபத்தில் இறந்துபோனவர் தண்ணீர் டேங்கை இறக்கி வைப்பதற்காக தான் சம்பந்தப்பட்ட வாகனத்தில் பயணம் செய்தார் என்றால் கோப்பின் அடிப்படையில் சரிதான். காப்பீட்டின் படி ஓட்டுநர் அல்லாது வாகனத்தில் பயணம் செய்யும் ஒரு நபருக்கு இழப்பீடு வழங்க முடியும் என்றால் சரிதான். ஒரு நபர் மட்டும் இந்த விபத்தில் இறந்துள்ளதால் இழப்பீடு செலுத்த கடமைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இறந்தநபர் எங்கள் நிறுவனத்திற்கு 3வது நபர் என்பதால் இழப்பீடு செலுத்த கடமைபட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.13 16:46:57 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.